நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 5 ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.309/2026
CNR.No.:**TNTS02-000903-2026**
IN
குற்ற எண்.34/2026

இசக்கிமுத்து,
த/பெ.கருப்பசாமி ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
தென்காசி கா.நி.கு.எண்.34/2026 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு.பி.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

மனுதாரர்/எதிரிக்கு பிரிவு 480 BNS ன் கீழ் பிணை வழங்க வேண்டி பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்** :–

மனுதாரருக்கு எதிராக U/s.305(d) BNS –ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் 18.01.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்** :–

இவ்வழக்கானது புலன் விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை E–filing செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் எதிரிக்கு தென்காசி காவல் நிலையத்தில் 11 குற்ற வழக்குகளும், குற்றாலம் காவல் நிலையத்தில் 2 குற்ற வழக்குகளும், தென்காசி காவல் நிலையத்தில் HS 407/2023 போக்கிரி பதிவேடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும்,

எனவே எதிரிக்கு பிணை கொடுத்தால் மீண்டும் திருட்டு குற்ற சம்பவங்களில் ஈடுபடுவார் என்றும், எனவே எதிரிக்கு பிணை கொடுக்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர்/எதிரி கடந்த 18.01.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரியவருகிறது. முதல் தகவல் அறிக்கையில் கோவிலில் இருந்த பொருட்களை பார்த்தப்போது சில்வர் குடத்திலான உண்டியல் அதில் இருந்த ரூ.7000/- ஆகியவற்றை யாரோ மர்ம நபர்கள் திருடி சென்றுவிட்டார் என்று கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், அரசு தரப்பில் இவ்வழக்கானது புலன் விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை E-filing செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் எதிரிக்கு தென்காசி காவல் நிலையத்தில் 11 குற்ற வழக்குகளும், குற்றாலம் காவல் நிலையத்தில் 2 குற்ற வழக்குகளும், தென்காசி காவல் நிலையத்தில் HS 407/2023 போக்கிரி பதிவேடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு பிணை கொடுத்தால் மீண்டும் திருட்டு குற்ற சம்பவங்களில் ஈடுபடுவார் என்றும், எனவே எதிரிக்கு பிணை கொடுக்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனைக் கருத்தில் கொண்டும் மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கினால் அது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் மார்ச் திங்கள் 5ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 16:02:36 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.